முருகப்பெருமான் துணை

**மகான் நந்தனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.07.2023, வியாழக்கிழமை

1. மாதரும மகா சக்கரவர்த்தியே
   மகேசனும் உமையும் வியக்க
   பூதலத்தில் தருமம் காக்கின்ற
   புண்ணியனே உன் பெருமைகூறி
2. கூறியே சோபகிருது நள்ளிதிங்கள்
   குறைவிலா சதுர்திகதி குருவாரம்
   **(சோபகிருது வருடம் ஆடி மாதம் 4ம் நாள், 20.07.2023, வியாழக்கிழமை)**
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   தேசிகனுக்கு நந்தனார் யானும்
3. யானுரைக்க இனமத சாதிபேதம்
   எங்கும் கருதா சன்மார்க்க
   ஞானம் அருளும் அரங்கா
   ஞானியே உன்வழி மக்கள்
4. மக்கள் நம்பிவர மாற்றம்
   மகத்துவம்பட நிகழுமென்பேன்
   ஆக்கமுடன் ஞானிகள் பூசை
   அனைவரும் செய்து வருக
5. வருகவே வளமானச் சூழல்
   வள்ளல் தன்மையாக நிரம்பி
   தருமம் வளர்க்கும் மக்களாக
   தரணிகாக்கும் சக்திகளாக மாறுவர்
6. மாறுதலை செய்யும் சக்தி
   மண்ணுலகில் வேலவனும்
   ஆறுமுக அரங்கன் கொண்டு
   ஆற்றல்பட நடத்தி வர

7. வருகவே பிரணவக் குடிலை
வலம் வந்து வரமாகத்தரும்
முருகப்பெருமான் சடாட்சர
முழுமைதரும் தீட்சைதனை ஏற்க

8. ஏற்கவே ஞான பலமுமாகி
எல்லோரும் தொடர்ந்திட
அற்புதம் படைக்கும் ஞானிகளாக
அகிலம்தனில் வளர்ந்து நிற்பர்

9. நிற்கவே ஞானமுடன் நல்ல
நீதி காக்கும் மக்களாக
ஏற்புகொள்ளும் நல்ல
இணையிலா தலைமை படைக்கும்

10. படைக்கும் மகா சக்திகளாக
பண்பாளர்கள் நிரம்பியபடி
தடை வெல்லும் சோடைவெல்லும்
தக்க ஞான சபையாகமாறி

11. மாறி இந்தப் பேருலகம்
மகத்துவம் பல கண்டடையும்
ஆறுதலும் நல்வழி காட்டலும்
அரங்கன் வழியே உலகம் காணும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–